மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: **திரு.T. கோகுல கிருஷ்ணன்** B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
**2022**ம் வருடம் **ஜூலை** மாதம் **14**ம் நாள் **வியாழக்**கிழமை
**சுபகிருது** ஆண்டு **ஆனி** மாதம் **30**ம் நாள்

**E.A.No. 27/2022**
**in**
**E.A. No. 53/2021**
**in**
**EP.No. 27/2008 in OS.No. 54/2003**

1. G. ரமேஷ்
2. R. அனுசுயா .... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/
3ம் தரப்பினர்கள்

//எதிர்//

1. A. காமாட்சி @ காமாட்சி பிள்ளை
2. A. தமிழ்ச்செல்வன் ..... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/
மனுதாரர்கள்

இம்மனு **28.06.2022**ம்தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/3ம் தரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.S.இராதாகிருஷ்ணன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.K.K.ரவி** அவர்கள் ஆஜராகியும், கடந்த **05.07.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/3ம் தரப்பினர்கள் தரப்பில், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதி கோரி கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனுவில் 3ம் தரப்பினர்கள் ஆவார்கள் என்றும், இந்த

மனுவின் எதிர்மனுதாரர்கள் இ.பி. 27/2008 மனுவில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நீதிமன்ற அமீன் மூலம் ஒப்படைப்பு எடுக்க வந்தார்கள் என்றும், மேற்படி இ.பி. மனுவின்படி ஒப்படைப்பு எடுக்க வந்த சொத்தில் நீரேத்தான் கிராமம் ரீ.ச.எண். 13/7B நிர் ஏக்கர் செண்டு 35ல் தென்பக்கத்தில் மேல்புறம் கிழமேல் 52 அடி தென்வடல் 16 அடி ஆக மொத்தம் 832 சதுரடி மற்றும் மேற்படி நீரேத்தான் கிராமம் புன்செய் சர்வே 13/7B நிர்க்கு UDR படி 13/20 நிர்க்கு 0.01.5க்கு செண்ட் 4-1/2 செண்ட் 3 கிழமேல் 44-1/2 அடி தென்வடல் 31 அடிக்கு 1379-1/2 சதுரடி ஆக தற்பொழுதைய சப்டிவிசன்படி ச.எண். 13/20 என்றும், மேற்படி சொத்து வாதிகள் தாக்கல் செய்த OS.No. 54/2003 வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 3வது லக்க சொத்தின் ஒரு பகுதியாகும் என்றும், மேற்படி சொத்தினை 2000ம் வருடத்திற்கு முன்பே எதிர்மனுதாரர்களின் மூதாதையர்கள் மற்றும் சில நபரிடம் மனுதாரர் கிரையம் பெற்றுள்ளதால், ஆர்டர் 21 மற்றும் ரூல் 97,99 சிபிசி ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள EA.No.53/2021 மனுதாரர் நிலை நிற்கத்தக்கதல்ல என்று எதிர்வாதம் செய்து இறுதியில் இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது என்றும், மேற்படி தள்ளுபடி உத்தரவினை மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் சீராய்வு மனு எண். 625/2022 ன்படி கடந்த 19.04.2022ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு, தற்பொழுது விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், E.A.No.53/2021 மனு தாக்கல் செய்த பொழுது இம்மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், தாவா சொத்தினை ஏற்கனவே இந்த எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றும் மூதாதையர்கள் நீரேத்தான் கிராம பேருந்து நிலையத்திற்கு விற்பனை செய்த ஆவணமும், ஆணையர் அறிக்கையின்படி மனுச்சொத்தின் மற்றொரு பகுதியை எதிர்மனுதாரர்களின் முன்னோர்கள் 1966ம் ஆண்டிற்கு முன்பே விற்பனை செய்ததற்கான ஆவணங்களும் தற்பொழுது தான் கிடைக்கப்பெற்றதால், மேற்படி ஆவணங்கள் E.A.No. 53/2021 முழு விசாரணையின்பொழுது, எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தினை பொய்ப்பிப்பதற்கு அவசியமானது என்றும், இந்த மனுவினை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபணை ஏதும் இருக்காது என்றும், மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரர்கள் தரப்பிற்கு ஈடில்லா இழப்பு ஏற்பட்டு விடும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு எதிர் மனுஉரையின் சுருக்கம்:**

இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த மனுவானது அசல் வழக்கின் பிரதிவாதிகளான சுப்பிரமணி அய்யர் மற்றும் சேதுராமன் ஆகியோரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்த்து தாக்கல் செய்யப்படாததால், இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மனுவில் குறிப்பிட்டபடி மனு சொத்து நீதிமன்ற ஆணையர் தாக்கல்

செய்த ஆணையர் அறிக்கையின்படி 3வது லக்க சொத்தின் ஒரு பகுதி என்பதை மனுதாரரே ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRP(MD) 1451/2013 உத்தரவில், தாவா சொத்தை கீழமை நீதிமன்றம் மூன்று மாதத்திற்குள் ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பாணை பெற்றவர் நீதிமன்ற விற்பனை மூலம் சொத்தின் அனுபவத்தினை பெறுவதற்கு உரிமையுள்ள நிலையில், அதற்கு இடையூறு ஏற்படும் பட்சத்தில் ஆர்டர் 21 ரூல் 97 சிபிசி-யின்படி நிவாரணம் கோரலாம் என்றும், ஆனால் இந்த மனுதாரர் ஏற்கனவே, தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகின்ற நிலையில், மேற்படி சட்டப்பிரிவின்படி நிவாரணம் கோருவதற்கான அவசியம் ஏதும் எழவில்லை என்றும், ஆர்டர் 21 ரூல் 99-ல் தீர்ப்பு கடனாளி அல்லாத பிற ஆள் எவரும் அசையா சொத்தின் சுவாதீனத்தை தீர்ப்பாணை பெற்றவரால் அல்லது நீதிமன்ற விற்பனை மூலம் சொத்தினை வாங்கியவரால் இழக்க செய்யப்படுகிறவிடத்து, அத்தகைய சுவாதீன இழப்பு பற்றி முறையிட்டு விண்ணப்பம் செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால், இந்த மனுவில் நாளது தேதி வரை கோரிக்கை ஆட்சேபணை மனுதாரர் தாவா சொத்தின் அனுபவத்திலிருந்து சுவாதீன இழப்பு அடையவில்லை என்பதால் அது தொடர்பாக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள EA.No. 53/2021 மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை EA.No. 53/2021-ல் தாக்கல் செய்யாததற்கான காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்றும், தாவா சொத்தினை மனுதாரர்களின் முன்கிரையதாரரர்கள் 1954-லிருந்து அனுபவம் செய்து வந்து, கடந்த 2012ல் மனுதாரர் கிரையம் வாங்கியதாக கூறுவது பொய் என்றும், அந்த சொத்திற்கும், தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லை என்றும், ஏனெனில் E.P.27/2008 -ல் அமீனா, விஏ.ஓ மற்றும் கமிஷனர் உள்பட 2003ல் தாவா இடத்தை அளந்த போது, இந்த EA 27/2022 மனுதாரர்களின் முன்னோர்கள் தாவா இடத்தில் இருந்தார்கள் என்பது பொய் என்றும், அப்படியிருந்திருந்தால், 2003-லே மனுதாரர்களின் முன்னோர்கள் தடுத்து இருக்கலாம், மனுதாரர் கூறுவது போல் 2012ம் வருடத்தில் தாவா சொத்தினை மனுதாரர்கள் வாங்கி நாளது தேதி வரை அனுபவத்தில் இருந்திருந்தால், 2013ல் சர்வேயர் வி.ஏ.ஓ உதவியுடன் மீண்டும் அளந்த போது தடுத்து இருக்கலாம் அவ்வாறு செய்யாமல், தற்போது காலதாமதம் ஏற்பட்டது என்று பொய்யான காரணங்களை கூறி இந்த தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

5) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம்

நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

6) கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் மனுவில், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் நிறைவேற்று மனு எண். 27/2008 தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது.

8) இம்மனுவின் அசல் வழக்கு ஆவணங்களை சமூக நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வகையில், இந்த மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் இம்மனுவின் அசல் நிறைவேற்று மனுவில் கடந்த 29.10.2021 தேதியில் இடைநிலை மனு தாக்கல் செய்யப்பட்டு, அது EA.No.53/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வரப்பெற்றுள்ளதாக வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

9) இம்மனுவின் அசல் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களால், மனு சொத்திலிருந்து காலி செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க வேண்டி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) இந்த மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால், இம்மனுவின் இடைநிலை மனுவாக EA.No. 53/2021 தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனு சொத்து தொடர்பாக அசல் நிறைவேற்று மனுவான EP.No.27/2008-ல் பிறப்பிக்கப்பட்ட சுவாதீன ஒப்படைப்பு உத்தரவை நீக்கறவு செய்திட வேண்டியும் மனு சொத்தை பொறுத்து, உரிமை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கு ஆவணங்களை பார்வையிடப்பட்ட வகையில் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11) இவ்வாறு இருக்கையில், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில்,"அபிடவிட்டு பாரா 4ல் சொல்லியபடி மேற்படி சொத்து வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையின்படி 3வது லக்க சொத்தில் ஒரு பகுதி இதை இந்த மனுவை தாக்கல் செய்த மனுதாரரே ஒப்புக்கொண்டுள்ளார்." என்றும், "மனுதாரர்கள் சொல்லியபடி சிபிசி ஆர்டர் 21 மற்றும் ரூல் 97, 99ன்படி தாக்கல் செய்த மனு சட்டப்படி தவறானது. ஏனெனில் தீர்ப்பாணை பெற்றவர் அல்லது நீதிமன்ற விற்பனை மூலம் சொத்தின் அனுபவத்தினை பெற உரிமையுடையவர் அல்லது வேறு எந்த நபரும் சொத்தின் அனுபவத்தினை பெறுவதற்கு இடையூறு ஏற்படும் பட்சத்தில் மேற்படி சட்டப்பிரிவின்படி (ஆர்டர் 21 ல் 97) நிவாரணம் கோரலாம். ஆனால், இந்த நிர் மனுதாரர் ஏற்கனவே சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகின்ற நிலையில், மேற்படி சட்டப்பிரிவின்படி

நிவாரணம் கோருவதற்கான அவசியம் எதுவும் சட்டப்படி எழவில்லை. ஆர்டர் 21 ரூல் 99ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, தீர்ப்பு கடனாளி அல்லாத பிற ஆள் எவரும் அசையா சொத்தின் சுவாதீனத்தை தீர்ப்பாணை பெற்றவரால் அல்லது நீதிமன்ற விற்பனை மூலம் சொத்தினை வாங்கியவரால் இழக்க செய்யப்படுகிறவிடத்து (Dispossessed of immovable property) அத்தகைய சுவாதீன இழப்பு பற்றி முறையீட்டு அவர் நீதிமன்றத்திற்கு ஒரு விண்ணப்பம் செய்யலாம். ஆனால் இந்த நிர் வழக்கு பொருண்மைகளின்படி இன்றைய தேதி வரை கோரிக்கை ஆட்சேபணை மனுதாரர் தாவா சொத்தின் அனுபவத்திலிருந்து சுவாதீன இழப்பு அடையவில்லை. (Not dispossessed) எனவே சுவாதீன இழப்பு என்பதே எற்படாத நிலையில், அது தொடர்பாக பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்வதற்கு சட்டப்படி எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதோடு அதுவும் முன் கூட்டியே (Premature) தாக்கல் செய்யப்பட்டதால் இ.ம.எண். 53/2021 மனு உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 99ன்படி பரிகாரம் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இ.பி.27/2008ல் அமீனா, வி.ஓ மற்றும் கமிஷண் உள்பட 2003ல் தாவா இடத்தை அளந்த போது இந்த இ.பி 27/2008 மனுதாரர்களின் முன்னோர்கள் தாவா இடத்தில் இருந்தார்கள் என்பது சுத்தப்பொய். அப்படி இருந்து இருந்தால் 2003லேயே இ.எ 27/2022 மனுதாரர்களின் முன்னோர்கள் தடுத்து இருக்கலாம். அவ்வாறு 2003ல் யாரும் செய்யவில்லை. அட்வகேட் கமிஷனரும் சர்வேயர், வி.எ உதவியுடன் இந்த மனு சொத்தை மற்ற சொத்துடன் சோத்து அளந்து தனது ரிப்போர்டை தாக்கல் செய்து உள்ளார். மேலும் இந்த நிர் மனுதாரர்களான ரமேஷ், மற்றும் அனுசுயா ஏதோ தாவா சொத்தை 2012லேயே வாங்கி தாவா இடத்தில் இன்று வரை இருந்து வருவதாக சொல்லுவது சுத்தப்பொய். தாவா சொத்தை 2012ல் வாங்கி தாவா இடத்தில் இருந்து வந்து இருந்தால் வாதிகள் 2013ல் சர்வேயர் வி.எ உதவியுடன் மீண்டும் அளந்த போது தடுத்து இருக்கலாம். அவ்வாறும் செய்யவில்லை. ஏன்? ஏனெனில் மூன்று ஆண்டுக்குள் நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். அப்படி இல்லாததால் கால தாமதம் ஏற்பட்டு விட்டது. அதை மறைக்க பொய்யான தகவல்களை சொல்லி மனு தாக்கலை ரமேஷ் மற்றும் அனுசுயா தாக்கல் செய்து இருக்கிறார்கள்."

இவ்வாறு எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் எதிர்மனு உரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களால் எதிர்மனு உரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்தவரை இம்மனுவின் அசல் இ.ம.எண். 53/2021 மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் ஆகும் என்று சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

12) மேலும், Delhi High Court, Gold Rock World Trade :Ltd. vs Veejay Lakshmi Engineering works, The first application (IA6388/2006) has been filed under Order 7 Rule 14, Order 16 Rule 1, read with Section 151 of the Code of Civil Procedure 1908, (hereinafter referred to as 'the CPC') for

production of additional documents and for filing an additional affidavit. The second application (IA 9770/2006) has been filed under Section 151 CPC for summoning a witness from the Indian Overseas Bank, defense Colony, New Delhi for the production of certain documents mentioned in the said application. Essentially, the question relates to the production of documents by the plaintiff.

In fact, the affidavit by way of evidence was filed by the plaintiff in the year 2003 and even in that affidavit, there is not reference to the documents which are now sought to be introduced. In may view, these circumstances clearly show that the conditions necessary before leave of the Court can be granted have not been satisfied. It cannot be said that the plaintiff was not aware of the plaintiff. All the material nor would to be introduced, was well within the knowledge of the plaintiff at least in the year 2003. As the plaintiff was not diligent enough at that point of time, this Court is left with no alternative but to reject its request.

இவ்வாறு மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்ற தீர்ப்புரையை எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் சுட்டிக்காட்டி வாதுரைக்கப்பட்டதை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

13) இம்மனுவின் அசல் நிறைவேற்று மனுவில் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP(MD).No. 1451/2013 மனுவில் நான்கு மாத காலக்கெடுவிற்குள் அசல் நிறைவேற்று மனுவை முடித்திட வேண்டி அறிவுறுத்தப்பட்டதை சமூக நீதிமன்றத்தால் கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

14) மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதில், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள்/3ம் தரப்பினர்கள் கைவசம் ஏற்கனவே இருந்து வந்துள்ளதாக ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகின்றது. மேற்படி மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் இம்மனுவின் இடைநிலை மனுவான EA.No. 53/2021 மனுவில் ஆவணங்களை குறியீடு செய்திட வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் ஆவணங்களின் உண்மைத்தன்மையை பொறுத்தவரை EA.No.53/2021 மனுவில் மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

15) இந்த மனு அனுமதிக்கப்படுவதினால், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களுக்கு EA.No. 53/2021 மனுவில் எதிர் வாதத்திற்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படாது என்று சமூக நீதிமன்றத்தால்

அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் EA.No. 53/2021 மனுவில் சாட்சியாக விசாரணை செய்யக்கூடிய மனுதாரர்கள்/3ம் தரப்பினரை குறுக்கு விசாரணை மூலம் ஆவணங்களின் உண்மைத்தன்மைக் குறித்து பரிசோதனை செய்து கொள்ள வாய்ப்பு உள்ளதாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகின்றது.

16) ஆகவே, இந்த மனு அனுமதிக்கப்படுவதினால், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களுக்கு அசல் நிறைவேற்று மனுவான EP.No. 27/2008 மனுவிற்கோ, EA.No. 53/2021 மனுவிற்கோ எந்த வகையிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று அறிந்து கொள்ள முடிகின்றது.

17) இருப்பினும், மனுதாரர்கள்/3ம் தரப்பினர்களால் ஆவணங்களை குறியீடு செய்திட வேண்டி அனுமதி கோரப்பட்ட இந்த மனுவானது, காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிவதாலும், ஆவணங்களை குறியீடு செய்திட வேண்டி மனுதாரர்கள்/3ம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் ஏற்கனவே மனுதாரர்கள்/3ம் தரப்பினர் வசம் இருந்திருக்க வாய்ப்புள்ளதாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிவதாலும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களுக்கு இம்மனுவின் செலவுதொகையாக ரூ.1000/- எதிர்வரும் 20.07.2022 தேதிக்குள் மனுதாரர்கள்/3ம்தரப்பினர்கள் செலுத்தி வைக்க வேண்டியது. அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் இந்த மனு சட்டத்திற்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படும்.

இறுதியாக,

எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களுக்கு இம்மனுவின் செலவுதொகையாக ரூ.1000/- எதிர்வரும் 20.07.2022 தேதிக்குள் மனுதாரர்கள்/3ம்தரப்பினர்கள் செலுத்தி வைக்க வேண்டியது. அவ்வாறு செலவுதொகை செலுத்தாத பட்சத்தில் இந்த மனு சட்டத்திற்குட்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படும் என உத்தரவு பகரப்படுகிறது. வழக்கு விசாரணை 21.07.2022.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.